**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு 2017 ஜனவரி 1 முதல் 2017 டிசம்பர் 31 வரை ஆற்றிய பணிகள்**

1. **உயர் கல்வி வாய்ப்பை விரிவாக்கல்; புதிய பட்டப்படிப்பு இடங்களை உருவாக்கல்**

**1.1.** *இரண்டு புதிய மருத்துவ பீடங்களை உருவாக்கியமை*

இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தில் ஒன்றும், சபரகமுவ பல்கலைக்கழகத்தில் ஒன்றுமாக இரு மருத்துவ பீடங்கள் ஸ்தாபிக்கப்பட்ட வருடமாக 2017 ஆம் ஆண்டு வரலாற்றில் பதிவாகும்.

**1.2.** *குறித்த காலப்பகுதியில் மாணவர் தொகையின் மொத்த அதிகரிப்பு -1180*

**1.3.**

- மருத்துவம் -160
- பொறியியல் -50
- முகாமைத்துவம் மற்றும் வர்த்தகம் -285
- தொழில்நுட்பம் -225
- விஞ்ஞானம் -200
- மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் -100
- தகவல் தொழிநுட்பம் -80
- விவசாயம் -45
- சட்டம் -20
- இணை மருத்துவ கற்கைநெறிகள் -05
- சித்த மருத்துவம் -10

1.4. *புதிய பீடங்கள், துறைகள் மற்றும் பட்டக் கற்கை நெறிகள்*

**1.4.1.** ஆறு (6) புதிய பீடங்கள் அங்கீகரிக்கப்பட்டன:

| இல | பீடத்தின் பெயர் | பல்கலைக்கழகம் |
|---|---|---|
| 1. | இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடம் | உறுகுணை பல்கலைக்கழகம் |
| 2. | மருத்துவ பீடம் | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் |
| 3. | தொழில்நுட்ப பீடம் | இலங்கை ரஜரட்ட |

| | | |
|---|---|---|
| | | பல்கலைக்கழகம் |
| 4. | தொழில்நுட்ப பீடம் | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் |
| 5. | தொழில்நுட்ப பீடம் | இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் |
| 6. | தொழில்நுட்பவியல் கற்கைகள் பீடம் | இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் |
| 7. | தாதியியல் பீடம் | கொழும்பு பல்கலைக்கழகம் |

1.4.2. *முப்பத்தொன்பது (39) புதிய துறைகள் அங்கீகரிக்கப்பட்டன:*

- கொழும்பு பல்கலைக்கழகம் -01
- பேராதனைப் பல்கலைக்கழகம் -02
- ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் -05
- களனி பல்கலைக்கழகம் -03
- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் -03
- உறுகுணை பல்கலைக்கழகம் -03
- இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் -02
- இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் -09
- இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் -05
- இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் -02
- இலங்கை ஊவாவெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் -02
- இலங்கை திறந்த பல்கலைக்கழகம் -02

1.4.3. *ஒரு (01) புதிய கற்கைநெறி அங்கீகரிக்கப்பட்டது:*

- நிதிப் பொறியியல்- களனி பல்கலைக்கழகம்

1.4.4. *முப்பத்து மூன்று (33) புதிய பட்டக் கற்கை நெறிகள் (18 பட்டப்படிப்பு கற்கை நெறிகளும் 15 பட்டப்பின் படிப்பு கற்கை நெறிகளும்) அங்கீகரிக்கப்பட்டன:*

- கொழும்பு பல்கலைக்கழகம் -(பட்டப்படிப்பு-1 , பட்டப்பின்-4)
- பேராதனைப் பல்கலைக்கழகம்-(பட்டப்படிப்பு-2, பட்டப்பின் -1)
- களனி பல்கலைக்கழகம் - (பட்டப்படிப்பு-1)
- மொறட்டுவ பல்கலைக்கழகம் - (பட்டப்பின்-2)
- உறுகுணை பல்கலைக்கழகம்- (பட்டப்படிப்பு-1)
- கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை -(பட்டப்படிப்பு-2)
- இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்- (பட்டப்பின்-1)
- இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்- (பட்டப்படிப்பு-3)
- இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்- (பட்டப்படிப்பு-3)
- இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்- (பட்டப்படிப்பு-2)

- இலங்கை திறந்த பல்கலைக்கழகம்-(பட்டப்படிப்பு-3, பட்டப்பின்-2)
- கொழும்புப் பல்கலைக்கழக கணனிக் கல்லூரி-(பட்டப்பின்-5)

2. **அனுமதிச் செயன்முறை இலகுபடுத்தப்பட்டு, நவீனமயப்படுத்தப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டது**

அ. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மென்பொருளை தேர்தல் ஆணைக்குழுவிடம் உள்ள தரவுகளுடன் இணைப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு அதன் மூலம் பல்கலைக்கழக அனுமதிக்கான மாவட்டத்தை நிர்ணயிப்பதற்குத் தேவையான வாக்காளர் இடாப்பின் பிரித்தெடுத்த பகுதிகள் உபயோகப்படுத்தப்பட்டன.

ஆ. இவ்வொழுங்கினால், மாணவர்கள் தங்களது விண்ணப்பத்துடன் அனுப்பி வைப்பதற்காக, வாக்காளர் இடாப்பின் பிரித்தெடுத்த பகுதியைத் தேர்தல்கள் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய தேவை இப்போது இல்லை. இதனால் விண்ணப்பிக்கும் செயன்முறை இலகுவாக்கப்பட்டுள்ளது.

இ. இவ் வழிமுறையானது பல்கலைக்கழக அனுமதிகள் செயன்முறையின் வினைத்திறனையும் வெளிப்படைத் தன்மையினையும் அதிகரித்தது.

ஈ. பல்கலைக்கழக அனுமதிச் செயன்முறையின் வினைத்திறன் மற்றும் வெளிப்படைத்தன்மையினை மேலும் முன்னேற்றுவதற்காக பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிக்கும் மாணவர்களின் தேசிய ஆளடையாளத்தை உறுதி செய்து கொள்வதற்காக வேண்டி ஆட்கள் பதிவுத் திணைக்களத்துடன் ”புரிந்துணர்வு ஒப்பந்தம்” ஒன்று செய்யப்பட்டுள்ளது.

3. **அரச பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதித்தலுக்கும் க.பொ.த உயர்தரப் பரீட்சை முடிவுகள் வெளிவருதலுக்கும் இடையிலான கால இடைவெளியைக் குறைப்பதற்கான தேசியக் கோரிக்கையை எதிர்கொண்டமை.**

இக் கோரிக்கையானது, மாணவர்களுக்கு, தற்போதைய அனுமதி முறையில், அவர்களது விருப்புகளில் அவர்களது திறமையை அடிப்படையாகக் கொண்டு, பட்டக்கற்கை நெறியொன்றுக்கு வாய்ப்பளிக்கும் போது, அவர்கள் அதற்கான பதிவை மேற்கொள்ளாது விடுவதால், அம் மாணவர்கள் தமது

விருப்புக் கற்கைநெறியைத் தெரிவு செய்ய பல சுற்று வாய்ப்புக்களைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வழங்குவதால் எழுகின்றது. இந்த நேர விரய முறையானது பல்கலைக்கழகங்கள் ஆரம்பமாவதைக் கால தாமதமடையச் செய்கிறது.

இப் பிரச்சனையை எதிர்கொள்ள ப.மா.ஆ குழு எடுத்த பின்வரும் நடவடிக்கைகள் க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியானதற்கும் அனைத்துப் பல்கலைக்கழகங்களினதும் வேறுபட்ட கற்கை நெறிகளுக்குத் தெரிவான மாணவர் பெயர் பட்டியலை வெளியிடுதலுக்கும் இடையிலான இடைவெளியை ஐந்து (5) மாதங்களால் குறைத்தது.

அ. பல்கலைக்கழகங்களின் கற்கை நெறிகளுக்கு பதிவுசெய்தற்கான காலக்கெடு முடிவுபெற்றவுடனே பல்கலைக்கழகங்களில் உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையை நேரடியாக அடையாளம் காணும் புதிய பொறிமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆ. குறிப்பிடத்தக்களவு எண்ணிக்கையுள்ள வெற்றிடங்களையுடைய கற்கைநெறிகளைக் கொண்ட பல்கலைக்கழகங்களில், அப் பல்கலைக்கழகங்களின் உபவேந்தர்கள் பீடாதிபதிகளின் இணக்கத்தினைப் பெற்றதன் பின், வெற்றிட நிரப்பலை விரைவுபடுத்துவதற்கான புதிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

இ. தமக்கு வழங்கப்பட்ட பல்கலைக்கழகக் கற்கைநெறியில் திருப்தியடைந்த மாணவர்கள் தமது அனுமதி விண்ணப்பத்தின் போது சமர்ப்பித்த விருப்பு கற்கை நெறிப் பட்டியலில் இருந்து தம்மால் அதி கூடிய விருப்பப் பல்கலைக்கழக கற்கை நெறிகளாக நிரல்படுத்தப்பட்டவற்றில் வெற்றிட நிரப்பலின் போது கருத்திற் கொள்ளப்பட வேண்டியதில்லை எனக் கருதும் கற்கைநெறிகளை நீக்கக் கூடியதானவொரு புதிய பொறிமுறை அறிமுகப்படுத்தப்பட்டது.

ஈ. இதன் மூலம் தமது கூடிய விருப்புடைய கற்கைநெறிகளுக்கு உயர்த்தப்படாமல் தாம் தெரிவான பல்கலைக்கழகக் கற்கைநெறியில் இருப்பதற்கான சந்தர்ப்பம் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. இம் முறையானது மாணவர்கள் தாம் அக்கறை கொள்ளாத கற்கைநெறிகளுக்கு பதிவு செய்யாதிருப்பதைக் குறைத்ததுடன், வெற்றிட நிரப்பலின் போது அதிக எண்ணிக்கையான வெற்றிடங்களை நிரப்பவும் உதவியது. இது 2016/2017 கல்வியாண்டுக்கான மாணவர் உள்வாங்கல் பட்டியல் இறுதி செய்யும் போது இருந்த வெற்றிடங்களின் எண்ணிக்கையை 2015/2016 கல்வியாண்டு அனுமதியின் போது இருந்த வெற்றிட எண்ணிக்கையின் எழுபது வீதத்திற்கும் (70%) மேற்பட்ட அளவுக்குக் குறைத்தது.

ஊ. இப்போது ப.மா.ஆ குழு பல்கலைக்கழகங்கள் தமது கல்விசார் நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கு முன்னரே பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களைப் பதிவு செய்வதைப் பூரணப்படுத்தி, பதிவு செய்த மாணவர் பட்டியலைப் பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பி வைக்கவும் முடிகிறது.

4. **பயிற்சிப் பொருத்தமின்மை என்ற பிரச்சனையை எதிர்கொள்ள, தொழிற்சந்தைக்கு உகந்ததாகப் பல்கலைக்கழகக் கல்வியை மேம்படுத்த அரச பல்கலைக்கழகங்களில் புதிய வழிகள் பிரேரிக்கப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்டமை.**

அ. தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பொருத்தமானதும் புதுமையானதுமான கற்கை நெறிகளை அறிமுகப்படுத்த பல்கலைக்கழகங்கள் ஊக்குவிக்கப்பட்டன. அவற்றுக்கான நிதி உதவியை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வழங்கும்.

ஆ மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் கற்கை நெறிகளைப் புதிய அறிவு, திறமைகளை அறிமுகப்படுத்துவதினூடு, நாட்டின் தற்காலத் தேவைக்கேற்றவாறு மீளமைப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இ. தற்போதைய பல்கலைக்கழக அனுமதி முறையினூடு அரச பல்கலைக்கழகங்களில் அனுமதி பெற முடியாது போன மாணவர்களுக்கு புதிய சந்தர்ப்பமொன்றை வழங்க, தொழிற்சந்தைத் தேவைப்பாட்டை இலக்கு வைத்து, தொழில் மையப்படுத்தப்பட்ட மூன்று வருட பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை அறிமுகப்படுத்தி அவற்றை அங்கீகரிக்கப்பட்ட அரசினது அல்லாத உயர்கல்வி நிறுவனங்களினால் கட்டணம் செலுத்தல் அடிப்படையில் நடாத்தப் பல்கலைக்கழகங்களுக்கு புதிதாக அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இது 2018 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட உரையில் முக்கியமானதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உ. அரச மற்றும் தனியார் துறைகளின் வேலைகொள்வோர்களது பங்குபற்றுதலுடனும், யுனெஸ்கோ நிறுவன நிதி உதவியுடனும் பட்டதாரி வேலைவாய்ப்பு பற்றி பகுத்து ஆராய்ந்து தரவுகளை மையமாகக் கொண்ட சான்றுகளைப் பெறுவதற்கானதொரு ஆய்வு (Tracer study) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

5. **பல்கலைக்கழக கல்வியாளர்களின் தரம் மற்றும் ஆற்றலை வலிமை பெறச்செய்தல்.**

அ. பல்கலைக்கழக ஆய்வு வெளிக்கொணர்வு செயற்பாடுகளையும் சேவையையும் செயற்றிறன் அடிப்படையிலான சர்வதேசச் சுட்டியினூடு வெளிக்கொணரப்பட்ட, அவற்றின் பெறுபேறாகக் கிடைக்கும் நன்மைகளை (உருவாக்கப்பட்ட வருமானத்தை) பல்கலைக்கழக அபிவிருத்திக்காகவும் பணியாளர்களதும் மாணவர்களதும் நன்மைக்காகவும் தக்க வைத்துக் கொள்ளல், பகிர்தல் மூலமும் பல்கலைக்கழக கல்விசார் கட்டுமான அமைப்பின் கடமைகளைச் சிறப்பாக நிறைவேற்ற ஊக்கவிக்கப்பட்டது.

ஆ. அரச பல்கலைக்கழகங்கள் மூலம் வழங்கப்படும் பட்டப் படிப்பு நிகழ்ச்சித் திட்டங்களின் பெறுமானங்களை அளவிடுவதற்கான பொறிமுறையொன்று ப.மா.ஆ வினால் உருவாக்கப்பட்டது.

**6. அரச மற்றும் அரசினது அல்லாத பல்கலைக்கழகங்களின் கல்விசார் கட்டமைப்பின் தர உத்தரவாத செயன்முறைகளை வலுப்படுத்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல்:**

அ. உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் , உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் ஆகியோரது வழிகாட்டுதலின் கீழ் உயர்கல்வி அமைச்சும் ப.மா.ஆ. குழுவும் இணைந்து அரச மற்றும் அரசினது அல்லாத உயர்கல்வி நிறுவனங்களைத் தர உறுதிப்படுத்தல் மற்றும் அங்கீகாரமளித்தலுக்கானதொரு புதிய சுயாதீனமான தர உறுதிப்படுத்தல் மற்றும் அங்கீகாரமளித்தல் அதிகார சபை ஒன்றை ஸ்தாபிப்பதற்கான புதிய நகல் சட்ட வரைபைத் தயாரித்தன.

ஆ. இந்நகல் சட்ட வரைபு விரைவில் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படும். இது இலங்கையின் உயர்கல்வி அமைப்பில் தர உத்தரவாதம் மற்றும் அங்கீகார முறைமையினை மாற்றமடையவும் உயர்த்தவும் செய்யும்.

இ. அரச பல்கலைக்கழகங்களில் தர உறுதிப்படுத்தல் செயன்முறையினை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் தர உறுதிப்படுத்தல் அதிகாரத் தலைமையகம் ஒன்று உருவாக்கப்பட்டதுடன், 2017 ஆம் ஆண்டில் மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பட்டக்கல்வி நிகழ்ச்சித்திட்டங்களில் 42 தர உறுதிப்படுத்தல் (QA) மதிப்பிடுகைகள் பூர்த்தி செய்யப்பட்டன.

**7. பல்கலைக்கழக - உற்பத்தித் தொழில் நிறுவன இணைப்புக்கள்:**

பட்டதாரிகள் புதிய தொழில் முயற்சிகளை முன்னெடுப்பதற்குத் தேவையான ஆரம்ப நிதியைப் பெற்றுக் கொடுப்பதற்காக தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து பல்கலைக்கழகப் பட்டதாரிகளுக்கான ”பட்டதாரிகள் தொழில் முயற்சி முன்னெடுப்பு” (Upaadhidari Vivasayaka Udanaya) என்ற தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

**8. பால்நிலைப் பாரபட்சமும் சமத்துவமும் மற்றும் பால்நிலை காரணமான வன்முறை என்பவற்றிற்கு முகம்கொடுத்து உயர்கற்கைக்குப் பாதுகாப்பானதும் உகந்ததுமான சுற்றுப்புறச் சூழ்நிலையை உருவாக்கவும் பல்கலைக்கழகங்களில் பகிடிவதையினைக் கட்டுப்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொண்டமை:**

அ. முதற்தடவையாக, மாணவர்கள் அரச பல்கலைக்கழகங்களில் பதிவு செய்யும் போது மாணவர்களும் அவர்களது பெற்றோர் / பாதுகாவலர்களும் மாணவர்கள் தமது பல்கலைக்கழக கற்கைக் காலத்தில் பகிடிவதை, பாலியல் மற்றும் பால்நிலை காரணமான வன்முறைகளில் ஈடுபட்டால் ஏற்படும் பலாபலன்களை நன்கறிந்துள்ளனர் என்று சத்தியக்கடதாசி முடிப்பது கட்டாயமாக்கப்பட்டது.

1998 ஆம் ஆண்டின் பகிடிவதைச் சட்டத்தின் பிரகாரம், பகிடிவதை, பாலியல் மற்றும் பால்நிலை காரணமான வன்முறைகளில் ஈடுபட்டதற்குக் குற்றவாளியாகக் காணப்பட்டால் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேற்றப்படல், ஏழு வருட கடூழிய சிறைத் தண்டனை என்பவற்றுக்கும் உட்படுத்தப்படுவர்.

ஆ. பகிடிவதை, பாலியல் மற்றும் பால்நிலை காரணமான வன்முறைகளாலான மனத்தாங்கல் நிவர்த்திக்கான பொறிமுறைகள் பின்கண்டவாறு உருவாக்கப்பட்டன:

- ஒன்லைன் புகுமுகம் (www.ugc.ac.lk/rag)
- 24/7 அழைப்பு மையம் (0112123700)
- பிரத்தியேக மின்னஞ்சல் முகவரிகள் (ragginghelp@ugc.ac.lk & helpme@ugc.ac.lk)
- ”அவசரப் பாதுகாப்பு கையடக்கப் பிரயோகத்திற்கென” ICTA உதவியுடன் நகலொன்று அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.இது விரைவில் உபயோகத்துக்கு வரும்.
- ”பல்கலைக்கழகத்தில் பகிடிவதை பாலியல், பால்நிலை காரணமான வன்முறைகள் குறித்த மாணவர்களுக்கான தகவல்கள்” என்ற சிற்றேடு (Brouchure) மற்றும் ”பகிடிவதை

முறைப்பாடுகள் புகுமுகத்துள் எவ்வாறு நுழைவது" என்பதை விளக்கும் அசைவூட்டம் மிக்க காணொளி (Video animation) ஆகியன புதிய மாணவர்களுக்கு வழங்க உருவாக்கப்பட்டன.

- பகிடிவதை மற்றும் பாலியல், பால்நிலை காரணமான வன்முறை பற்றிய தரவுத்தளங்கள் உருவாக்கப்பட்டன.
- பகிடிவதை மற்றும் பாலியல், பால்நிலை காரணமான வன்முறைகளுக்கு ஒன்லைன் புகுமுகம் ஒன்று அபிவிருத்தி செய்யப்பட்டது.
- மேலே பகுதி (அ) வில் குறிப்பிட்டதன் படி, மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்களால் ஒப்பமிட்ட சத்தியக் கடதாசிகளானவை, 1998 ஆம் ஆண்டின் பகிடிவதைகள் சட்டத்தின் படி பல்கலைக்கழகங்களில் வன்முறைகள், பகிடிவதைச் செயற்பாடுகளில் ஈடுபடுவதன் விளைவுகள் / பலாபலன்கள் குறித்து அவர்கள் அறிந்திருப்பதை உறுதி செய்து கொள்ளும் ஒரு ஆதாரமாகக் கொள்ளப்படும்.

இ. பல்கலைக்கழகங்களில் பகிடிவதையினைத் தடுப்பதற்கும் இல்லாதொழித்தற்குமாக பொலிஸ் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய பல்பகுதிசார் அதியுயர் அதிகாரம் மிக்க பணிப் படை ஒன்று நிறுவப்பட்டது.

ஈ. பல்கலைக்கழகங்களில் பகிடிவதை மற்றும் பாலியல், பால்நிலை தொடர்பான வன்முறைகளை எதிர்த்து வெற்றி கொள்ள தந்திரமான தலையீடுகளை வகுப்பதற்காக பகிடிவதை மற்றும் பாலியல், பால்நிலை தொடர்பான வன்முறை சம்பவ நிகழ்வுகள், அவை வியாபித்தல் ஆகியவை பற்றிய ஆய்வுகள் முன்னெடுக்கப்படுதல்.

உ. பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஆளணியினருக்கான "பால்நிலைச் சமத்துவம் மற்றும் சமவுரிமை நோக்கிய பயணம்:- பல்கலைக்கழகங்களுக்கு இடையிலானதொரு விழா" என்ற தலைப்பிலான பல்கலைக்கழகங்களுக்கு இடையே பாலின சமத்துவ சமவுரிமைக் கருத்தை மேம்படுத்துவதற்கான வருடாந்த நிகழ்ச்சியொன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஊ. பால்நிலை பற்றிய கொள்கையை அமுலாக்கவும் பகிடிவதை மற்றும் பால்நிலை சமத்துவம் சமவுரிமை தொடர்புபட்ட வன்முறைகளுக்கு முகம்கொடுக்கவும் பல்கலைக்கழக மட்ட பால்நிலை தொடர்பான கேந்திர நிலையங்களின் வலைப்பின்னல் ஒன்று உருவாக்கப்பட்டது.

எ. உயர் கல்வியில் பாலின நிலை பற்றிய ஆய்வு மாநாடு ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

9. **பட்டதாரிகளின் ஆங்கில மொழியில் பேசும் ஆற்றல், எழுத்தாற்றல் மற்றும் தொடர்பாடல் திறன்களை வளர்ப்பதற்காகவும் ஆங்கில மொழி கற்பித்தல் விரிவுரையாளர்களின் ஆளுமையை அதிகரிக்கச் செய்வதற்குமாக இலங்கைப் பல்கலைக்கழகங்களில் ஆங்கில மொழி கற்பித்தல் துறைகள் உருவாக்கப்பட்டன.**

10. **உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரின் ஒப்புதலுடன் மாணவர் சங்கம், கல்வி சார் மற்றும் கல்வி சாரா ஊழியர் சங்கங்களுடன் நெருங்கிய உரையாடல்களுக்கான தளம் அமைக்கப்பட்டது.**

11. **பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்ற மாணவர்களுக்கு, அவர்கள் பல்கலைக்கழகக் கற்றல் நடவடிக்கைகளைத் தொடங்க முன்னர், ஆங்கிலம் மற்றும் தகவல் தொழிநுட்பம் சம்பந்தப்பட்ட கற்கையை ஒன்லைன் ஊடாகக் கற்றுக்கொள்ள ஒன்லைனில் பாடப்பகுதியொன்றை உருவாக்க நிதி ஒதுக்கப்பட்டு ஒன்லைனில் பாடப்பகுதியைத் திறமையான முறையில் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைப்பதற்கும் வசதிகள் செய்யப்பட்டன.**

12. **பல்கலைக்கழகங்களின் உட்கட்டுமான அபிவிருத்திகள்**

- முன் சிகிச்சைக் கட்டடம், கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடம் ரூபா 6,604 மில்லியன்
- தொழில்நுட்ப பீடம் கொழும்பு பல்கலைக்கழகம் ரூபா 2,087 மில்லியன்
- தொழில்நுட்ப பீடம் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் ரூபா 2,640 மில்லியன்ள
- விரிவுரை அரங்கத் தொகுதி களனிப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடம் ரூபா 500 மில்லியன்
- மொறட்டுவ பல்கலைக்கழக திரவிய விஞ்ஞானங்கள் மற்றும் பொறியியல் கட்டடம் ரூபா 439 மில்லியன்
- யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கான கட்டடம் ரூபா 700 மில்லியன்
- யாழ்ப்பாண பல்கலைக்கழக தொழிநுட்ப பீடக் கட்டடம் ரூபா 525 மில்லியன்
- உறுகுணை பல்கலைக்கழக மருத்துவ பீட 12 மாடி அடுக்குக் கட்டடம் ரூபா 1,179 மில்லியன்
- இலங்கை வயம்ப பல்கலைக்கழக மருத்துவ பீடம் ரூபா 3,229.4 மில்லியன்
- மருத்துவப் பட்டப்பின் கற்கைகள் நிறுவக கட்டடம் ரூபா 2,500 மில்லியன்

- திருகோணமலை வளாகத்திற்கான கேட்போர் கூடம் ரூபா 784.8 மில்லியன்
- இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்திற்கான "பதவியணியினர் வீட்டுத் திட்டம்" ரூபா 414.7 மில்லியன்
- இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்திற்கான நூலகக் கட்டடம் ரூபா 371.8 மில்லியன்
- இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கான தொழில்நுட்ப பிரிவுக்கான கட்டடத் தொகுதி ரூபா 451 மில்லியன்
- கட்புல அரங்கேற்றகற் கலைப் பல்கலைக்கழகக் கட்டடத் தொகுதி ரூபா 775 மில்லியன்
- உறுகுணை பல்கலைக்கழக தொழில்நுட்ப பிரிவுக்கான கட்டடத் தொகுதி ரூபா 692 மில்லியன்
- பல்கலைக்கழகங்களில் 23,200 மாணவர்கள் தங்குவதற்காக ஒவ்வொன்றிலும் 4 அடுக்கு மாடியில் 100 அறைகள் கொண்ட 58 விடுதிகளைத் தாபிப்பதற்காக ரூபா.2.857 மில்லியன் தொகை முதலீடு செய்யப்பட்டது.

**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு**

02.02.2018